**மாத்தறை மாநகர சபை - 2020**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாத்தறை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பஸ் நிலைய வர்த்தக தொடர் கட்டடத்தின் கடன் கணக்கில் ரூபா 49,774,022 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், இந்த கடன் தொகைக்கான கடன் தவணை மற்றும் வட்டி கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த கடன் தொகைக்குரிய உடன்படிக்கை தொடர்பாக சிக்கல்ளை தீர்த்துக்கொண்டு வட்டியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 337,405 தொகைக்கான நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,290,598 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கழிவு என கிடைத்திருந்த ரூபா 185,230 இற்கான புத்தகங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2021 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 4,576,000 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (உ) | வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 100,750 தொகை பலவினக் கடன் கொடுத்தோர் மற்றும் களஞ்சியக் கடன் கொடுத்தோர் ஆகிய இரண்டிற்கும் செலவு வைக்கப்பட்டமையால் அந்தத் தொகையினால் மிகை மற்றும் களஞ்சியக் கடன் கொடுத்தோர் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் ஊழியர் கடன் கணக்கு ரூபா 2,000,561 தொகை குறைவாகவும் காசு மாற்றல் கணக்கு அதே பெறுமதியால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | வர்த்தக தொடர் கட்டடம் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகையில் 35 சதவீதம் அதாவது ரூபா 37,871,539 தொகை தொடர் கட்டடத்தின் கடைகளுக்காக டென்டர் மூலம் பெற்றிருந்த முன்கொடுப்பனவுகளில் இருந்து செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தொகையினை தீர்த்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் தொகையை செலுத்துவதற்கு வட்டிச் சலுகை ஒன்று கோரியிருந்ததுடன் அதற்கான பதில் கிடைத்திருக்கவில்லை என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 62,219,663 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதி மற்றும் அதனோடு | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி |

| | | |
|---|---|---|
| தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதி ரூபா 58,240,330 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 3,979,333 இற்கான வித்திசயாசம் ஒன்று காணப்பட்டது. | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 67,037,964 தொகைக்கான கணக்கு மீதிகள் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | தற்போது நாளதுவரை ஆக்கப்பட்டு வருகின்றது என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| தாபனக் கோவையின் xix அத்தியாயம் | | | |
| பிரிவு 5:4:1 மற்றும் 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 04/2016 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து 2012 செப்தெம்பர் முதல் 2019 ஜூலை 31 வரையான காலப் பகுதியில் உத்தியோகபூர்வ வாசஸ்தள வாடகை ரூபா 289,872 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | 1947 இன் 16 ஆம் இலக்க மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் படி பொது சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | தாபனக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா

91,331,461 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 122,101,310 தொகையாகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 55,075,936 தொகை காணப்பட்டது. | நிலுவை அட்டவணை காலாண்டு அடிப்படையில் பெற்றுக் கொண்டு வருமானப் பரிசோதகர் மற்றும் ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அறவீடு செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வீதவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 49,608,219 இற்கான நிலுவைக் கடை வாடகை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்காக அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டது எனவும் கொவிட் தொற்று நோய் காரணமாக வியாபார நிலையங்கள் மூடப்படல் மற்றும் நலிவுறல் காரணமாக வரி அறவீடு செய்வதற்கு முடியாமல் போனது என. | நிலுவை வாடகை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நில வாடகை ரூபா 7,723,418 தொகையாக காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் காரணமாக வர்த்தக நிலையங்கள் மூடப்படல் அல்லது நலிவடைந்திருந்த காரணத்தினால் வரி செலுத்துவதற்கு வராமை காரணத்தினால் நிலுவை மீதி அதிகரித்திருந்தது என. | நிலுவை நில வாடகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டு திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மா நகர சபைக்குச் சொந்தமான கொப்பரவத்தை மஹாநாம ஞாபகர்த்த சனசமூக நிலையத்தின் 7744 சதுர அடிகள் தொகையொன்று வெளித் தரப்பினருக்கு சபையின் அங்கீகாரம் மற்றும் சபைக்கு கட்டணம் செலுத்தப்படாமல் தனியார் உடற்பயிற்சி நிலையம் ஒன்று நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது. | சபை தீர்மானத்தின் படி அடுத்த நிதி மற்றும் கொள்கை நிலையான குழுக் கூட்டத்திற்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சபைக் சொந்தமான நிலையான சொத்துக்கள் முறைப் பிரகாரம் வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை மா நகர சபையினால் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 35 தொன் குப்பைகளை வகைப்படுத்தி பெற்றுக் கொண்டு கொடவில குப்பை செயற்களத்திற்கு வேறாக்கப்படாமல் அகற்றப்பட்டிருந்தது. குப்பையை சமப்படுத்துவதற்காக 2018 மே 18 திகதி முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியுள் ஸ்கவேடர் இயந்திரம் ஒன்று வாடகைக்கு பெற்று 5671 மணித்தியாலங்களுக்காக ரூபா 26,934,997 தொகை செலவிடப்பட்டிருந்தது. குப்பையை பயன்படுத்தி உயிர்வாயு உற்பத்தி செய்து அதன் மூலம் மின்சக்தி உற்பத்தி செய்தல் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி செய்யும் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குப்பைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டத்திற்கு குப்பைகளை பெற்றுக் கொள்ளல் ஆரம்பிக்கப்பட்ட உடனே இந்த ஸ்கவேடர் இயந்திரத்தினால் பெற்றுக் கொள்ளப்படும் சேவையை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். |